**சுருக்கம்**

சுற்றுலா – மாநில அரசு திட்டங்கள் 2011–2012– மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் அறிவிப்புகள் – விருதுநகர் மாவட்டம் – ரமண மகரிஷி பிறந்த இடமான திருச்சுழியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் –ரூ.49.57 இலட்சம் திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி– சுற்றுலாத் துறையின் பங்கு ரூ.24.785 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு3)த் துறை**

அரசாணை (நிலை) எண்.220 நாள்:26.11.2011

(திருவள்ளுவர் ஆண்டு 2042, கார்த்திகை–10)

**படிக்கப்பட்டது**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் அவர்களின் கடித எண். 2172/ 2010/கியூ2, நாள் 1.11.2010.
2. சுற்றுலா ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 8786/திமவ 2 /2010, நாள் 21.9.2011.

-----

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 30.8.2011 அன்று சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:–

> ***“….ரமண மகரிஷி பிறந்த இடமான திருச்சுழி மற்றும் வைணவத் தலமான திருத்தங்கல் ஆகிய இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இங்கு தங்கும் விடுதி, கழிப்பறைகள், தெருவிளக்குகள், சாலை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும்”.***

2. மேலே பத்தி 1ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி விருதுநகர் மாவட்டத்தில், ரமண மகரிஷி பிறந்த இடமான திருச்சுழியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சுற்றுலா ஆணையர் உரிய கருத்துரு அனுப்பியுள்ளார். சுற்றுலா ஆணையர் தனது கருத்துருவில், இது தொடர்பாக விருதுநகர் மாவட்ட ஆட்சியர், விருதுநகர் மாவட்டம், திருச்சுழி முதல்நிலை ஊராட்சியில் உள்ள பகவான் ரமண மகரிஷி இல்லம் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள தேவைப்படும் மொத்த திட்ட மதிப்பீடான ரூ.49,57,000/–ல் (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்தேழாயிரம் மட்டும்) சுற்றுலாத் துறையின் பங்காக 50 சதவிகிதம் ரூ.24,78,500/–க்கு (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து ஐநூறு மட்டும்) ஒப்புதல் கோரி கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடு அனுப்பியுள்ளார் என்றும் மீதமுள்ள 50 சதவிகித தொகையினை மாவட்ட நிர்வாகம்

ஏற்றுக் கொள்ளும் என்பதற்கான ஒப்புதலையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இத்திட்ட மதிப்பீட்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள பணிகள் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டப்பணிகள் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | திருச்சுழி கிராமத்தில் மகளிர் சுகாதார வளாகம் அமைத்தல் | 4,00,000 |
| 2 | திருச்சுழி குண்டாற்றங்கரையில் மகளிர் சுகாதார வளாகம் அமைத்தல் | 4,00,000 |
| 3 | திருச்சுழி குண்டாற்றங்கரையில் ஆண்களுக்கான சுகாதார வளாகம் அமைத்தல் | 4,00,000 |
| 4 | திருச்சுழி குண்டாற்றங்கரையில் உடை மாற்றும் அறை கட்டுதல் | 4,00,000 |
| 5 | திருச்சுழியில் பயணிகள் தங்குமிடம் கட்டுதல் | 8,90,000 |
| 6 | திருச்சுழியில் பயணிகள் நிழற்குடை அமைத்தல் | 5,35,000 |
| 7 | திருச்சுழி கிராமத்தில் நடைபாதை மற்றும் சிமெண்ட் சாலை அமைத்தல் | 4,82,000 |
| 8 | திருச்சுழி குண்டாற்றங்கரையில் ஆண்களுக்கான குளியலறை கட்டுதல் | 65,000 |
| 9 | திருச்சுழி குண்டாற்றங்கரையில் பெண்களுக்கான குளியலறை கட்டுதல் | 65,000 |
| 10 | திருச்சுழி குண்டாற்றங்கரையில் திதி காரியங்கள் செய்யும் பிரார்த்தனை மண்டபங்கள் கட்டுதல் | 5,00,000 |
| 11 | குடிநீர் வசதிகள் செய்தல் | 8,20,000 |
| | **மொத்தம்** | 49,57,000 |

3. மேலே பத்தி 2ல் குறிப்பிடப்பட்டுள்ள விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவிற்கு சுற்றுலா ஆணையர் பரிந்துரை அளித்துள்ளார். ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு வழங்கவும், இத்திட்டப் பணிகளை செயற்படுத்துதலை மாவட்ட நிர்வாகம் மூலம் மேற்கொள்ளவும் அனுமதி அளிக்குமாறும் சுற்றுலா ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேலே பத்தி 2–3 ல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா ஆணையரின் கருத்துருவினை ஏற்று பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:

(அ) விருதுநகர் மாவட்டம், திருச்சுழி முதல்நிலை ஊராட்சியில் உள்ள பகவான் ரமண மகரிஷி இல்லம் அமைந்துள்ள பகுதியில், மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை ரூ.49.57 இலட்சம் (ரூபாய் நாற்பத்தொன்பது இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) மேலே பத்தி 4(அ) வில் குறிப்பிட்டுள்ள மொத்த திட்ட மதிப்பீட்டில் 50 சதவிகிதம் சுற்றுலாத் துறையின் பங்காக ரூ.24,78,500/–க்கு (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து ஐநூறு மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(இ) சுற்றுலாத் துறையின் பங்குத் தொகையான ரூ.24,78,500/— ஐ (ரூபாய் இருபத்து நான்கு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து ஐநூறு மட்டும்) சுற்றுலா இயக்குநர் அவர்கள் பெற்று விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

(ஈ) இத்திட்டப் பணிகளை செயற்படுத்துதலை விருதுநகர் மாவட்ட நிர்வாகம் மூலம் மேற்கொள்ளவும், மீதமுள்ள 50 சதவிகித திட்ட மதிப்பீட்டுத் தொகையினை விருதுநகர் மாவட்ட நிர்வாகம் ஏற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> 5452—சுற்றுலா குறித்த மூலதனச் செலவு—01—சுற்றுலா அடிப்படை வசதிகள்—101—சுற்றுலாத் தலங்கள் —பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்—II மாநிலத் திட்டம் — KV - சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் —16—பெரும்பணிகள்.
> (கு.தொ.கு 5452 01 101 KV 1604).

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.261/DS(KM)/கல்வி—II/2011, நாள்:04.11.2011—ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

வி.கு. ஜெயக்கொடி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை—2.
மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை—9.
(சுற்றுலா இயக்குநர் வழியாக)
மாநில கணக்குத் தலைவர், சென்னை —9/18.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை—9.
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
தலைமைச் செயலாரின் தனிச்செயலர், சென்னை—9.
முதன்மைச் செயலரின் தனிச்செயலர், நிதி/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை—9.
நிதி (கல்வி2)த் துறை, சென்னை—9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு(சு1,சு2,பொது)த் துறை, சென்னை—9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்